06 வருட காலமாக வெற்றிகரமாக இயங்கி வரும் கல்வி நிறுவனம்

# தமிழ்

## மொழியும் இலக்கியமும்

ZOOM ONLINE CLASS

# தரம் 09

முதலாம் தவணை

**அலகு 03 – ஒரு சின்னஞ் சிறு பூச்சி**



தமிழ் ஆசான்

# "அகரம் திணேஸ்"

SLTS, BA (honours) IN TAMIL DIP IN G/D & ARTIFICIAL INTERLLIGENCE

REGISTER NOW 0778054232

AGARAM DHINES ONLINE ACADEMY

அகரம்
த. தினேஸ்
SLTS, BA (hons) Tamil, Dip G/D)& AI

# ஒரு சின்னஞ்சிறு பூச்சி

## பகுதி I

**(01) பின்வருவனவற்றுள் ஒத்தகருத்தற்ற சொல்லின் கீழ்க் கோடிடுங்கள்.**

1. 1. வஞ்சனை 2. கபடம் 3. நிந்தனை 4. மாயம்
2. 1. மலர்ச்சி 2. பொலிவு 3. அழகு 4. இழிவு
3. 1. முறுவல் 2. புன்னகை 3. குமுறல் 4. நகை
4. 1. ஆர்வலர் 2. ஆர்வமுள்ளவர் 3. சோம்பேறி 4. முனைபவர்
5. 1. கூறுதல் 2. செப்புதல் 3. கரைதல் 4. நவிலுதல்

**(02) பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான எதிர்க்கருத்துச் சொல்லைத் தெரிக.**

6. **சன்மார்க்கம் :**
   1. சகமார்க்கம் 2. தாசமார்க்கம் 3. துன்மார்க்கம் 4. இழுக்கம்
7. **கண்வளர்தல் :**
   1. கண்மூடல் 2. கண்திறத்தல் 3. கண்மலர்தல் 4. கண்காட்டல்
8. **ஏகம் :**
   1. ஒன்று 2. பல 3. அநேகம் 4. அமோகம்
9. **வள்ளன்மை :**
   1. நயவஞ்சகம் 2. இவறன்மை 3. ஈயாப்பத்தன் 4. கொடையாளி
10. **சமத்துவம் :**
    1. ஒற்றுமை 2. வேற்றுமை 3. தீண்டாமை 4. சாதாரணம்

**(03) பொருத்தமுற இணைத்துக் காட்டுக.**

| | |
|---|---|
| 11. தாமரைமுகம் | 1. குணவாகுபெயர் |
| 12. உலகம் அழுதது | 2. காலவாகுபெயர் |
| 13. கோடை விளைந்தது | 3. பொருளாகுபெயர் |
| 14. வெற்றிலை நட்டாள் | 4. இடவாகுபெயர் |
| 15. நீலஞ்சூடினாள் | 5. சினையாகுபெயர் |

**(04) பொருத்தமான விடையைத் தெரிவு செய்யுங்கள்.**

AGARAM DHINES

16. செய்பவன் தானே செய்வதாக அமையும் வினை கொண்ட வாக்கியம்.

1. பிறவினை
2. தன்வினை
3. செய்வினை
4. செயப்பாட்டுவினை

17. பிறரைக் கொண்டு செய்விப்பதாக அமையும் வினைகளைக் கொண்டதாக அமையும் வாக்கியம்

1. தன்வினை
2. முன்வினை
3. பிறவினை
4. நல்வினை

18. அவன் செய்தானல்லன் இவ்வாக்கியம்,

1. உடன்பாட்டு வாக்கியம்
2. எதிர்மறை வாக்கியம்
3. பிறவினை வாக்கியம்
4. தன்வினை வாக்கியம்

19. முற்றுவினைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

1. வந்த
2. தருக
3. ஓடிய
4. பாய்ந்த

20. ‘ கல்வியின் அருமை’ என்பதில் வந்த ‘ இன்’ என்னும் இடைச்சொல்.

1. வேற்றுமையுருபு
2. விகுதி
3. சாரியை
4. இடைநிலை

**(05) பின்வரும் சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான பழமொழிகளைத் தெரிக.**

21. பெரும் பயனைக் கருதிக்கொண்டு செய்வோரும் உண்டு.

1. கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை.
2. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.
3. சோழியன் குடுமி சும்மா ஆடாது.
4. வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு.

22. வீண்கதை பேசித்திரிவோர் துன்பமடைவர்.

1. செடியில் வணங்காததா மரத்தில் வணங்கும்.
2. வேலியே பயிரை மேய்ந்தது.
3. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
4. நுணுலும் தன் வாயால் கெடும்.

23. தக்கசமயம் வரும்போது தவறவிடக்கூடாது.

1. உப்பிட்ட வரை உள்ளளவும் நினை.
2. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.

AGARAM DHINES

3. நிழலின் அருமை வெயிலில் தெரியும்.

4. விரலுக்குத்தக்க வீக்கம்.

24. உயர்ந்தவன் எந்நிலையிலும் தாழ்ந்து போகமாட்டான்.

1. கடுகுசிறிது காரம் பெரிது

2. புத்திமான் பலவான்.

3. புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.

4. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.

25. பின்னர் வரப்போகும் ஆபத்தை முன்யோசனையோடு தடுக்க வேண்டும்.

1. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது.

2. வெள்ளம் வருமுன் அணைகோல் வேண்டும்.

3. தலைக்குமேல் வெள்ளம் வந்தபின் சாணேறி என்ன? முழமேறி என்ன?.

4. இருந்த வெள்ளத்தையும் வந்த வெள்ளம் கொண்டு போய்விட்டது.

**(06) சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

26. “ஊர்வாயை மூட உலைமூடி இல்லை” என்பதில் “ஊர்” என்பது,

1. இயற்பெயர்
2. காரணப்பெயர்
3. பொருளாகுபெயர்
4. இடவாகுபெயர்

27. பின்வருவனவற்றில் ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவாக வழங்கப்படும் ஒரு சொல்,

1. நம்பி
2. ஐயை
3. கூத்தி
4. விவேகி

28. தென்னையில் கிளி இருந்தது, இங்கு “இல்” உருபு உணர்த்தும் பொருள்.

1. செயப்படுபொருள்
2. எல்லைப்பொருள்
3. இடப்பொருள்
4. எழுவாய்ப்பொருள்

29. விமலனால் கதவு திறக்கப்பட்டது. இங்கே திறக்கப்பட்டது என்பது.

1. தன்வினை
2. பிறவினை
3. செய்வினை
4. செயப்பாட்டுவினை

30. மழை பெய்யக் குளிர் பரவியது. இதில் பெய்ய என்பது,

1. இறந்தகாலப் பெயரெச்சம்.
2. இறந்தகால வினையெச்சம்.
3. நிகழ்காலப் பெயரெச்சம்.
4. நிகழ்கால வினையெச்சம்.

AGARAM DHINES

**(07) பின்வருவன சரியாயின் ' சரி' என்றும் பிழையாயின் ' பிழை' என்றும் எழுதுக.**

31. அது என்னும் உருபு ஆறாம் வேற்றுமையை உணர்த்திவரும். ( )

32. கிழமைப்பொருள் என்பது உடைமைப்பொருள் என்று பொருள்படும். ( )

33. தற்கிழமை என்பது பிரிக்கக்கூடியது. ( )

34. ஏழாம் வேற்றுமை தற்கிழமையும் பிறிதின்கிழமையும் ஏற்கும். ( )

35. ஒருவினைமுற்றுச்சொல், தனக்குரிய முற்றுப்பொருளை உணர்த்தாமல் பின்னால் வரும் பெயரையோ வினையையோ கொண்டுமுடியுமானால் அது முற்றெச்சம் எனப்படும். ( )

**(08) பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.**

36. "மலரெனப் பொலிந்த முகம்." இதில் வந்த என என்னும் இடைச்சொல் தந்த பொருள்.

1. வினை
2. பெயர்
3. பண்பு
4. உவமை

37. இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை ஈறாகவுள்ள ஆறுவகை வேற்றுமை பொருள்களும் உணர்த்தும் தொடர்.

1. அல்வழித்தொடர்
2. வேற்றுமைத்தொடர்
3. உம்மைத்தொகை
4. உரிச்சொற்றொடர்

38. குறிப்பு வினை முற்றாகவும் குறிப்பு வினைப் பெயரெச்சமாகவும் வரத்தக்க சொல்,

1. பெரியன
2. சிறியவை
3. கொன்ற
4. சிறிய

39. உடன்பாட்டுப் பொருளையும் எதிர்மறைப் பொருளையும் தரும் ஒரு வினைமுற்று

1. பாடாய்
2. செய்யேல்
3. கூடினை
4. விடுமின்

40. பின்வருவனவற்றில் நடந்தது என்னும் சொல் வினையாலணையும் பெயராய் வந்த வாக்கியம்.

1. அவன் நடந்ததைக் கண்டேன்
2. அவன் விரைவாய் நடந்தது நன்று.
3. நடந்தது நடந்து விட்டது.
4. குமரன் நடந்தது அழகாய் இருந்தது.

## பகுதி II

**(01) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. பூச்சி ஊர்ந்து வருவதைக் கண்ட சிறுவன் என்ன செய்தான்?



AGARAM DHINES
Agaram Dhines (SLTS, BA Tamil, Dip in G/D) AI
0778054232
GRADE – 09 (TAMIL)

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

2. சின்னஞ்சிறு பூச்சியின் உருவ அமைப்பை கதாசிரியர் எவ்வாறு வருணிக்கிறார்?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

3. சிறுவன் பூச்சியின் மேல் ஆத்திரம் கொள்ளக் காரணம் யாது?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

4. “ வெற்றி எனக்குத்தான்” என்று மகன் எந்த அடிப்படையில் கூறினான்?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

5. “ வெற்றி பூச்சிக்குத்தான்” என தந்தை கூறியதற்குக் காரணம் என்ன?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

6. இக்கதையைப் படித்ததன் மூலம் நீங்கள் உணர்ந்து கொள்வன யாவை?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

AGARAM DHINES

**(02) பின்வரும் பொருள்களைக் குறிக்க வழங்கும் வேறு மூன்று சொற்கள் தருக.**

1. பத்திரிகை :……………………………………………………………………

2.. இலட்சியம் :……………………………………………………………………

3. ஆத்திரம் :……………………………………………………………………

4. உதிரம் :……………………………………………………………………

5. வீறு :……………………………………………………………………

**(03) பின்வரும் பந்தியில் உள்ள வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் கருத்துத் தொடர்பின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்காக்கிக் கருத்துத் தொடர்புள்ள பந்தியாக எழுதுங்கள்.**

அ) நாம் சில நூல்களை வாங்கலாம்.

ஆ) சிலவற்றைப் பலமுறை படித்துச் சிந்திக்கலாம்.

இ) பல்கலை அறிவுபெற நூலகம் சிறந்தவாயில் என்பதை அறியலாம்.

ஈ) அதில் உறுப்பினராகி விட்டால் நூல்களை வீட்டிற்குக் கொண்டு வந்தும் படிக்கலாம்.

உ) பொதுவாக நூல்கள் பல வகைப்படும்.

ஊ) எல்லா நூல்களையும் வாங்க இயலாது.

எ) சில நூல்களை ஒருமுறை படித்து மகிழலாம்.

ஏ) எல்லா வகையான நூல்களும் இருக்கும் இடமே நூலகம்

ஐ) சிலவற்றையோ வாழ்நாள் முழுவதும் வைத்துப் பாதுகாக்கலாம்.

ஒ) இவ்வகையில் நூலகம் மிகவும் பயனுள்ளது.

(குறிப்பு : முதல் வாக்கியம் உ.)

..................................................................................................................................
..................................................................................................................................
..................................................................................................................................
..................................................................................................................................
..................................................................................................................................
..................................................................................................................................
..................................................................................................................................
..................................................................................................................................
..................................................................................................................................
..................................................................................................................................
..................................................................................................................................
..................................................................................................................................
..................................................................................................................................

AGARAM DHINES

**(04) பின்வரும் சொற்களின் பொருள் நன்கு விளங்குமாறு வாக்கியம் அமையுங்கள்.**

1. வானம் :..................................................................................................................
2. வாணம். : ..............................................................................................................
3. அலகு :..................................................................................................................
4. அளகு : .................................................................................................................
5. அழகு : .................................................................................................................
6. அடம் :...................................................................................................................
7. அறம் : ..................................................................................................................
8. அரம் :...................................................................................................................
9. வலி :....................................................................................................................
10. வழி :...................................................................................................................

**(05) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

1. எனது கிராமம்.
2. மழைநாளில் நான் கண்டவை.
3. சுவாமி விபுலானந்தர்.
4. முயற்சி திருவினையாக்கும்.

**நினைவிற் கொள்க.**

விரைவு, வெகுளி, அச்சம், மகிழ்ச்சி, துன்பம், முதலிய பொருட்களை உணர்த்துவதற்காகவும். ஆசை நிலையாகவும் செய்யுளில் இசைநிறைத்தற்காகவும் ஒரு சொல், இரண்டு, மூன்று, நான்கு முறை தொடர்ந்து வருவது அடுக்குத் தொடராகும்.

AGARAM DHINES